# சுவிஸ் தமிழர்இல்லம்

அனைத்துலக ரீதியில் நடாத்தும் தமிழீழ கிண்ணத்திற்கான

# தமிழர் விளையாட்டு விழா 2019

Sportanlage Deutweg und Talgut, Winterthur, Zürich. 10 / 11 – Aug.2019

தமிழர் இல்லம்

**கரப்பந்தாட்ச் சுற்றுப்போட்டி –**
**அறிவுறுத்தல்களும் விதிமுறைகளும்**

கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி (5பேர், 4பேர், ஓவர்-கேம்)

தமிழர் விளையாட்டு விழா-2019 ஆரம்ப நிகழ்வாகிய, கொடியேற்றல், கொடிவணக்கம், அகவணக்கம் நிகழ்வுகளின் போது, மைதானத்திற்கு வருகை தந்திருக்கும், வீரர்கள், கழகங்கள் மற்றும் அனைவரும் தமது சீருடைகளுடன் ஆரம்ப நிகழ்வு நடைபெறும் இடத்தில் பிரசன்னமாயிருத்தல் அவசியம். முக்கியமாக முதலாவது ஆட்டத்திற்குரிய அணிகள் சீருடையுடன் சமூகமளிக்கத் தவறும் பட்சத்தில் குறித்த வீரர்கள், கழகங்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான தகமையிழந்தவர்களாக கருதப்படுவர்.

1. கழகங்கள் யாவும் 9.00 மணிக்கு மைதானத்தின் ஆரம்பநிகழ்வுகளில் பங்குகொள்ளும் விதத்தில் சமூகம் தருதல் விரும்பத்தக்கது.

2. போட்டிக்காக குறித்த நேரத்தில் ஒரு அணி வருகை தந்து எதிரணி வருகை தராவிடின் சமூகம் தந்த அணிக்கு வெற்றி வழங்கப்படும்.

3. வெற்றிக்கு 3 புள்ளிகளும், தோல்விக்கு 0 புள்ளியும் வழங்கப்படும்.

4. ஆட்டத்திற்கான பந்தினை சுற்றுப்போட்டி அமைப்பாளர்களே வழங்குவர்.

5. **அனுமதிக்கட்டணம் :**

| | | |
|---|---|---|
| 4பேர் கொண்டது | 125.- SFR | (**5** உணவு உட்பட) |
| 5பேர் கொண்டது | 150.- SFR | (**6** உணவு உட்பட) |

6. **போட்டிகளுக்கான நேரம் :**

| | |
|---|---|
| 4பேர் கொண்ட குழுத்தெரிவு | 15 நிமிடங்கள் |
| 4பேர் கொண்ட இறுதி | 20 நிமிடங்கள் |
| 5பேர்கொண்ட குழுத்தெரிவு | 15 நிமிடங்கள் |
| 5பேர்கொண்ட இறுதி | 20 நிமிடங்கள் |

7. ஒரு நாட்டு வீரர் வேறு நாட்டு அணியில் இணைந்து விளையாட அனுமதி இல்லை. அவ்வாறு விளையாடும் பட்சத்தில் முன்கூட்டியே சுற்றுப்போட்டி அமைப்பாளர்களிடம் அறிவித்தல் வேண்டும்.
உதாரணமாக கொலண்ட் நாட்டில் இருந்து ஒரு தெரிவு அணி தமிழீழக் கிண்ணத்திற்கான போட்டியில் கலந்து கொள்ள இருப்பின் அந்த நாட்டு வீரர் வேறொரு நாட்டு அணிக்காக விளையாட முடியாது. மாறாக தெரிவு அணியில் இடம்பெறாது விட்டால், அவர்களின் அனுமதியுடன் வேறு நாட்டு அணிக்காக விளையாடலாம்.

8. வேறு நாடுகளில் இருந்து வந்து சுவிஸ் நாட்டிலுள்ள அணிகளுக்காக ஆடுவதற்கு ஒரு வீரருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
அவரின் புகலிட அனுமதிஅட்டையின் பிரதி முன்னரே வழங்கப்பட வேண்டும்.

9. ஒவ்வொரு கழகமும் தமது வீரர்களின் பெயர் பட்டியலை தங்களது இரண்டாவது ஆட்டம் ஆரம்பமாவதற்கு முதல் சமர்பித்தல் வேண்டும். ஆட்டம் ஆரம்பமான பின்னர் வழங்கப்படும் வீரர்களின் பெயர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4 பேர் கொண்ட போட்டிகளுக்கு 2 பிரதி ஆட்டக்காரர் உட்பட 6 பேர்
5 பேர் கொண்ட போட்டிகளுக்கு 3 பிரதி ஆட்டக்காரர் உட்பட 8 பேர்

10. ஒரு ஆட்டத்தின் போது இரண்டு வீரர்களை மாத்திரமே மாற்றலாம். மாற்றம் பெற்று வெளியேறும் வீரர் திரும்பவும் அதே ஆட்டத்தில் பங்கெடுக்க முடியாது.

11. ஒவ்வொரு கழக வீரர்களும் தங்கள் கழகத்திற்கான எண்கள் பதித்த சீருடையை அணியவேண்டும்.

12. ஆட்டத்தின் போது மைதானத்தில் நடைபெறும் அனைத்து விடயங்களுக்கும் அணித்தலைவரே பொறுப்பாவர். சம்பந்தப்பட்ட விடயங்களை அணித்தலைவரே நிர்வாகிகளுடன் பேசமுடியும்.

13. மைதானத்தில் கலகத்தில் ஈடுபடுவதோ அல்லது நடுவரின் தீர்ப்பை மீறி மைதானத்தை விட்டு வெளியேறுவதோ தண்டனைக்குரியதாகக் கருதப்பட்டும். இவ்வாறு நடந்து கொள்ளும் வீரர்கள் சுவிஸ் தமிழர் கரப்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடாத்தப்படுகின்ற 3 சுற்றுப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கான அனுமதி மறுக்கப்படும். வெளிநாட்டிலிருந்து கலந்து கொண்ட அணிகளாயிருப்பின் அடுத்த ஆண்டு இதே போட்டியில் கலந்து கொள்ள அனுமதியில்லை.

14. போட்டியின்போது விதி மீறலுக்காக சிகப்பு அட்டை மூலம் வெளியேற்றப்படும் சந்தர்ப்பங்களில் வெளியேறும் வீரருக்காக பெயர்ப்பட்டியலில் உள்ள பிரதி ஆட்டக்காரர் விளையாட்டில் பங்கேற்கலாம். மாறாக பங்கேற்க மறுக்கும் அணி குறித்த போட்டியில் தோல்வியுற்றதாகக் கொள்ளப்படும்.

15. சீரற்றகாலநிலை, தவிர்க்கமுடியாத காரணங்கள் இருப்பின் சுற்றுப்போட்டியின் நேர அட்டவணையிலும், ஆட்டநேரத்திலும் மாற்றம் செய்யும் உரிமை சுற்றுப்போட்டி அமைப்பாளர்களுக்கு உண்டு.

16. நடுவருடன் வாக்குவாதப்பட்டாலோ, முறையற்ற நடத்தைகள் என அறிந்தாலோ உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆட்டத்தின் போது நடுவரை அவமதித்தல், போட்டி விதிமுறைகளை மீறி நடத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். இப்படியான தண்டனைக்குள்ளாகும் வீரர் ஒருவர் நடுவரின் தீர்மானப்படி மஞ்சல் அட்டையோ அல்லது சிகப்பு அட்டையையோ பெறும் வாய்ப்பு உண்டு. எச்சரிக்கையாக மஞ்சள் அட்டை காட்டப்படும் ஒரு வீரர் இரண்டு தடவை மஞ்சள் அட்டை பெற்றிருப்பின் மூன்றாவது தடவையாக சிகப்பு அட்டை காட்டப்படும். சிகப்பு அன்று நடைபெறும் ஏனையபோட்டிகளிலும் பங்குபற்ற முடியாது. மஞ்சள் அட்டையின் எண்ணிக்கை அவர் சம்பந்தப்பட்ட மொத்தப் போட்டிகளுக்கும் பொருந்தும்.

17. போட்டி விதிகள் சம்பந்தமாக நடுவரின் தீர்ப்பபே இறுதியானது.

18. நடுவரின் தீர்ப்பில் ஆட்சேபனை கொள்ளும் அணியினர் தமது ஆட்சேப மனுக்களை முறைப்படி சமர்ப்பிக்கவேண்டும்.

19. எதிரணி சம்பந்தமான ஆட்சேபமனு, தங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டி முடிவடைந்து பத்து நிமிடங்களுக்குள் ஆதாரங்களுடன் இதற்கென உரிய 'பாதுகாப்பு முறைப்பாட்டுப் படிவம்' பூர்த்திசெய்யப்பட்டு பிணைப்பணமாக 20 சுவிஸ் பிறாங்குகள் சேர்த்து தாக்கல் செய்யப்படவேண்டும். முறைப்பாட்டின் பெறுபேறு முறைப்பாட்டாளருக்கு சாதகமாக இருப்பின் பணம் மீளளிக்கப்படும். பாதகமாக இருப்பின் பிணைப்பணம் மீளளிக்கப்படமாட்டாது

20. எதிரணி சம்பந்தமான ஆட்சேபமனு, சம்பந்தப்பட்ட இரு கழகங்களில் முதலில் போட்டியிட இருக்கும் ஒரு அணியின் அடுத்த போட்டிக்கு முன்னர் தெரியப்படுத்தல் வேண்டும்.

21. சுற்றுப்போட்டியின் போது மைதான வளாகத்தினுள் மதுபானம் பாவித்தல், புகைத்தல், துர்வார்த்தைப் பிரயோகம் என்பன தவிர்க்கப்படுதல் வேண்டும். மாறாக இவ்வாறன செயல்களில் வீரர்கள், பொறுப்பாளர்கள், ஆதரவாளர்கள் ஈடுபட்டு நிரூபிக்கப்பட்டால் குறித்த அணி நான்கு பிரதான சுற்றுப்போட்டிகளில் தொடரந்து வரும் இரண்டு போட்டிகளிலும், அடுத்த ஆண்டு குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்ற போட்டியிலும் கலந்து கொள்ளவதற்கான அனுமதி மறுக்கப்படும்.

22. குறிப்பிட்ட நேரத்தில் போட்டி சம புள்ளியில் முடிவுற்றால் சேர்விஸ் பந்து இருக்கும் அணிக்கு வெற்றி வழங்கப்படும்.

23. **குழுநிலை தெரிவுப் போட்டியின்போது சம புள்ளிகள் இருப்பின் மேலதிகமாக 05 நிமிட ஆட்டம் நடைபெற்று வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படும். தொடர்ந்தம் சமநிலை எனின் இறுதியாக சேர்விஸ் இருக்கம் அணிக்கு வெற்றி வழங்கப்படும்.**

24. சேவிஸ் வழங்குனர் வலப்பக்க மூலைக் கோட்டிலிருந்து முட்டாமல் சேவிஸ் போடுதல் வேண்டும்.

25. விளையாடும் வீரர் நடுக்கோட்டில் முட்டலாகாது.

26. ஒற்றைக் கையால் விளையாடவோ, டாஸ் அடிக்கவோ, ஒருவர் முட்டி விளையாடவோ அனுமதி இல்லை.

27. ஒரு காலால் ஊன்றி இரு கைகளாலும் அடிக்க அனுமதியுண்டு.

28. அடிக்கும் போது கைகள் பிரிவது தவறாகும்.

29. நடுவரின் அனுமதியுடன் வீரர்கள் மாற்றப்படலாம். மாற்றப்படும் வீரர் மீளவும் அதே ஆட்டத்தில் ஆடமுடியாது.

30. நேரக்கட்டுப்பாடு மிகக் கண்டிப்பாக பேணப்படும்.

31. நடுவரின் சைகைகள் அனைத்தையும் கவனித்து விளையாட வேண்டும்.

32. எல்லைக்கோட்டு நடுவர்களாக இருவர் நியமிக்கப்படுவர்.

33. சுற்றுப்போட்டி தினத்தன்று நடுவரை மாற்றக்கோரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்பட மாட்டாது.

34. ஒரு கழகத்தின் இரு அணிகள் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதாயின், ஒரு அணியின் பெயர்ப்பட்டியல் குழுத்தெரிவிற்கு முன்னர் வழங்கப்படுதல் வேண்டும்.

**விழா ஏற்பாட்டுக் குழு**

**தமிழர் விளையாட்டுவிழா – 2019**